தரத்தில் நிகரற்ற
மான், முயல்,
விளக்கு, வரிக்குதிரை
செவன மாாக
ஓடுகளுக்கு,
மு. தா. பொன்னம்பலம்
36, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 22 மாசி 2 ரபி-ஆகி 27 இதழ் 32
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15 3 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1980-3-17
PERIODICALS DIVISION
LIBRARY

## ஜி. சி. ஈ. உயர்தர முடிவுகள் வெளியாகின

(கொழும்பு)

கடந்த ஆண்டு ஆகஸ்டில் நடைபெற்ற ஜி. சி. ஈ. உயர் தரப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின.

நேற்று பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்ட இம்முடிவுகள் இன்று பரீட்சார்த்திகளுக்கு கிடைக்கும். (இ)

# தேநீர், உணவு வகைகளுக்கும் விலைப்பட்டியல் அவசியம்

## மீறுவோர் மீது சட்டநடவடிக்கை வர்த்தக அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

ஹோட்டல்களிலும் சிற்றுண்டிச்சாலைகளிலும் தேநீர் உட்பட உப உணவு வகைகளின் விலைப்பட்டியல் நுகர்ச்சியாளர்களின் பார்வைக்கு தொங்கவைக்கப்படவேண்டும் என்று வர்த்தக அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு செய்யத்தவறும் ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகளின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வர்த்தக அமைச்சு அந்த உத்தரவில் தெரிவித்துள்ளது.

ஹோட்டல்களிலும் சிற்றுண்டிச்சாலைகளிலும் தேநீர், பால், மற்றும் சீனி ஆகியவற்றினால் தயாரிக்கப்படும் உணவுப்பொருட்களின் விலைகள் ஒரே சீராக இல்லாமல் இருப்பதால் பொதுமக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைப் போக்கவே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

பொதுமக்களின் நன்மை கருதி பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் தீவிரமாக அமுல் செய்யப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

### மண்ணெண்ணை

மண்ணெண்ணை விற்பனையாளர்களும் தமது விற்பனை நிலையத்தில் விலைப்பட்டியலைத் தொங்கவிட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது (இ)

யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்படும்

## மா தரம் குறைந்ததா? பேக்கரி உரிமையாளர் கேள்வி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வழங்கப்படும் மா தரம்குறைந்ததா? என்ற கேள்வி பேக்கரி உரிமையாளர் மத்தியில் எழுந்துள்ளது.

இந்த மாவினால் பாண் தயாரிக்க முடியாமலிருப்பதாகவும், பாண் பொங்குவதில்லையென்றும், சுருண்டு விடுவதாகவும் பேக்கரி உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதன்காரணமாக பேக்கரி உரிமையாளர் மாவை குறைத்து கொள்முதல் செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

தரம் குறைந்த மா விநியோகம் செய்வதுபற்றி சில பேக்கரி உரிமையாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் செய்திருப்பதாக தெரிய வருகிறது.

இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரியுடன் தொடர்பு கொண்டபோது புகார் எதுவும் கிடைக்கவில்லையென்றும் தற்பொழுது கப்பலிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மா, தரமானதென்றும், பெல்ஜியத்திலிருந்து வந்திருப்பதாகவும் தெரிவித்தார். (க)

யாழ். ஆஸ்பத்திரியில் ஒருபயங்கரசம்பவம்

# வார்ட்டுக்குள் நுழைந்த ஆயுதகோஷ்டி தாக்குதலுக்கு நோயாளி பலி!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி வாட்டுக்குள் பட்டப் பகலில் பயங்கர ஆயுதங்களுடன் அத்துமீறி புகுந்த நால்வர் அங்கு சிகிச்சை பெற்றுவந்தவரைப் பயங்கரமாக வெட்டிய சம்பவம் யாழ். ஆஸ்பத்திரி வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கத்தி வெட்டுக்குள்ளானவர் மாலையில் மரணமானார்.

கைகலப்பு சம்பவம் ஒன்றை அடுத்து காயமடைந்த மண்டதீவைச் சேர்ந்த சண்முகலிங்கம் சிறிதரன் என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் 15-ம் வாட்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

நேற்றுக்காலை சுமார் 6 மணியளவில் அத்துமீறி வாள் கத்தி, பொல்லு ஆகியபயங்கர ஆயுதங்களுடன் 15-ம் வாட்டுக்குள் புகுந்து அந்த நோயாளியைத் தாக்கிய போது சகநோயாளிகளும் ஆஸ்பத்திரி ஊழியர்களும் அதிர்ச்சியடைந்தனர்.

சிலநிமிடத்தின் பின்னர் காவலாளி ஒருவரும் கங்காணி ஒருவரும் பாய்ந்து சென்று ஒருவரை மடக்கி பிடித்தனர். மற்ற 3 பேர்களும் வாட்டிலிருந்து தப்பிச்சென்று விட்ட

[8-ம் பக்கம் பார்க்க]

## தொழிற் சங்க கமிட்டி இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி தேசியமாநாட்டை தொடர்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய வடமாகாண கூட்டு தொழிற்சங்க கமிட்டி இன்று யாழ்ப்பாணத்தில் கூடுகிறது.

இக்கூட்டத்தில் மேதின ஏற்பாடுகள் பற்றியும் ஆலோசிக்கப்பட விருக்கிறது. (க)

ஊனமுற்றவர்களுக்கான

# புனர்வாழ்வு இல்ல திறப்புவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம லயன்ஸ் கழகத்தினரால் அமைக்கப்பட்டுள்ள, ஊனமுற்றவர்களுக்கான புனர்வாழ்வு இல்ல திறப்புவிழா இன்றுமாலை, இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ள கில்னர் மண்டபத்தில், நடைபெறவுள்ளது.

சுமார் 40, 000 ரூபா செலவில் முதல் கட்டமாக, அபிவிருத்தி செய்யப்பட்ட, யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியிலுள்ள கில்னர் மண்டபத்தில் ஊனமுற்றவர்களுக்கான புனர்வாழ்வு இல்லம் அமைந்துள்ளது.

இந்நிலையத்தை லயன்ஸ் கழக மாவட்ட ஆளுனர் லயன்ஸ் டாக்டர் டபிள்யு. ஏ. பேர்டினட் திறந்துவைப்பார். இந்நிலையத்தில், முதல் கட்டமாக குறைந்த தொகையினர் அனுமதிக்கப்படுவர். இவர்களுக்கு இவ் இல்லத்தில் வைத்திய வசதிகளும், சுயமாக சம்பாதிக்கும் வசதிகளையும்; சௌகரியங்களும் வழங்கப்படும்.

யாழ். லயன்ஸ் கழகத்தின் ''உதவும் கரங்கள்'' திட்டத்தில் நிறுவப்படும், இந்நிலையம் மூன்றுண்டுகளில் பூரணப்படுத்தப்படும்.

[இதனை யொட்டிய விசேட மலர் உள்ளே]

உதவும் கரங்களால் ஊனமுற்றவர் வாழ்வு மலரட்டும்

ரூபா 1500 /-க்கு ஒரு நீரிறைக்கும் இயந்திரம்...

SANSO MODEL No. P. K. 2511

Suction 25 Ft
Delivery 75 Ft
½ H. P.—1 Inch Pump

சன்ஸோ ஜப்பானிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட அதி உன்னத இயந்திரம்

★ இலகுவான அமைப்பு முறை
★ சுலபமாக இயங்கும் தன்மை
★ வீட்டுப் பாவனை மின்சாரத்தில் இயங்குவது
★ நாள் முழுவதும் தொடர்ச்சியாக இயங்கும் வன்மை மிக்கது
★ ஒருமணி நேரத்தில் — 1000 கலன் நீரை இறைக்கும் சக்தியுள்ளது.
★ ½ குதிரை சக்தி கொண்டது
★ பரந்த பாவனைக்கேற்ற வசதி
★ முழுவதும் உருக்கினலானது

★ இதன் இயக்கத் தன்மையை எமது ஸ்தாபனத்தில் நேரில் பார்வையிட்டு உங்கள் தேவைக்குப் பதிவுசெய்யுங்கள்

தொலைபேசி: 7711

கல்கி சன்ஸ்
147, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

கைத்தறி நெசவு தெரிந்த பெண்பிள்ளைகள், தையல், சேலைகளுக்கு குஞ்சம் முடிதல், மற்றும் சிறிய வேலைகள் தெரிந்த பெண்பிள்ளைகளும் தேவை. நேரில் வரவும். அன்னம்ஸ் சாறிவேக்ஸ், 27/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (5204)

குறைந்தது இரண்டு வருடப் அனுபவமுள்ள Operators தேவை. நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும் உரிமையாளர், விபேட்டி சினிமா, அச்சுவேலி. 5218

## வகுப்புகள்

G. C. E. சாதாரண வகுப்பு ஆங்கில இலக்கண இலக்கியம் (English Literature) ஆங்கிலப் பேச்சு (Spoken English) தனிப்பட்ட முறையாயும், வீடுகள் சென்றும் கற்றுக் கொடுக்கப்படும். தொடர்பு: விளம்பர இல:5164, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 5164

## ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 65 பிரதான வீதி சண்முகம் மகாதேவா அவர்களிடம் 31-12-1977வரை அடைவு வைத்து மீட்கப் படாத நகைகள் 10-04-1980 காலை 9-30 மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
ஏலவிற்பனவாளர்.
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (5168)

## விற்பனைக்கு

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் ஆறு பரப்பு காணி. இரண்டு, மூன்றுதுண்டுகளாகப் பிரித்தும் கொடுக்கப்படும். அ. சிவானந்தன், 'நித்திய கல்யாணி', பலாலிவீதி, திருநெல்வேலி வடக்கு. 5221

நல்ல இனமுந்திரிகை (Grape) கன்றுகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அண்ணா பாம், இணுவில். 5206

கிளிநொச்சி நாலாம் வாய்க்காலில் 10½ ஏக்கர் இருபோகமும் நீர்ப்பாச்சல் உள்ள நெல் வயல் விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 5226, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5226

## தொண்டமான் மட்டக்களப்புக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. செள. தொண்டமான், மட்டக்களப்புக்கு விரைவில் விஜயம் செய்வார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மரப்பாலம், பு..., துறைநீலாவணை, வடமுனை, மான்கேணி, இராசதுரைபுரம் உட்படப் பல இடங்களில் குடியேறி வாழ்கின்ற மலையக மக்களைச் சந்தித்து, அவர்கள் பிரச்சினைகளை நேரில் கண்டறிவதற்காக இவ்விஜயத்தை மேற்கொள்வதாகவும், மட்டக்களப்புபகுதியிலுள்ள மலையக மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக இப்பகுதியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அலுவலகம் ஒன்று திறக்கப்படலாமெனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் திரு. எஸ். எம். செல்லச்சாமி இப்பகுதி மலையக மக்களைச் சந்தித்திருந்தார்.

## எரிபொருள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்பு தொகுதியில் படுவான் கரையில் புயலினால் வீழ்ந்த தென்னைமரங்கள் தற்போது செங்கற்கள் தயாரிக்கும் சூளைகளுக்கு எரிபொருளாக பயன்படுத்தப்படுகின்றன.

## தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி.

## லொறி திருத்த வேலைக்காய கேள்வி விண்ணப்பம்

கீழ்க் குறிப்பிடும் திருத்த வேலைக்காய கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 25-03-1980ந் திகதிக்கு முன்பு பதிவுத் தபாலில் "பொது முகாமையாளர், தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி" என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் "லொறிதிருத்த வேலைக்காய கேள்வி விண்ணப்பம்" என எழுதப்படல்வேண்டும். காரியாலய வேலை நாட்களில் முன் அறிவித்தல் கொடுத்து லொறியைப் பார்வையிடலாம்.

**திருத்த வேலை விபரங்கள்**

1. இயந்திரம் இறக்கி பூரண திருத்தம் செய்வதற்காய கூலி.
2. பூரண மை பூசுதல், பொருட்களும் கூலியும்
3. எழுத்துவேலை. பொருட்களும் கூலியும்.
4. ஏனைய சிறிய திருத்தங்கள்.

**பொதுமுகாமையாளர்,**
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி, 1980-03-12.
5216

## இராப்போசன விருந்து

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவன மாணவர் மன்றத்தின் வருடாந்த இராப்போசன விருந்து இன்று மாலை மன்றத் தலைவர் திரு. ஆர். வி. சிறீதரன் தலைமையில் நடை பெறும்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும், பாரியாரும் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். [வெ]

## தேவை

பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**1. பதவி: லொறிச்சாரதி-**

கல்வித்தகைமைகள்: 7-ம் தரக் கல்வித் தகைமையுடன், உடல்நலமும் லொறிச்சாரதியாக சேவையாற்றிய 10 வருட அனுபவமும்
வயது: 30க்கும் 55க்குமிடையில் இருக்கவேண்டும்.
சம்பளம்: தொழிற் சட்டங்களுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.
பிணை: ரூபா 500/- உரொக்கம் ரூபா 3000/- ஆதனம்.
நற்சான்றிதழ்: அண்மையில் பெற்றுள்ள இரு நற்சான்றிதழ்கள்.
விண்ணப்பங்கள் முடிவு திகதி: 22-03-80.

**2. பதவி: இரவுக்காவலாளி-**

கல்வித்தகைமைகள்: 8-ம் தரக் கல்வித்தகைமையுடன் உடல் நலமும் ஒரு வருட அனுபவமும்.
வயது: 25க்கும் 45க்கும் இடையில் இருக்க வேண்டும்.
சம்பளம்: ரூபா 150 — 212 (5×10 — 6×2) (அரசாங்க விசேட படிகள் தவிர்ந்த)
பிணை; ரூபா 500/- ரொக்கம்.
நற்சான்றிதழ்கள்: அண்மையில் பெற்றுள்ள இரு நற்சான்றிதழ்கள்.
விண்ணப்பங்கள் முடிவு திகதி: 22-03-80
விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

தலைவர்,
**வடமாகாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**
25, முன் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: விண்ணப்பங்களை அனுப்பும்போது தபால் மேல் உறையில் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். எவ்வித பிரத்தியேகத் தொடர்புகளும் தகுதியின்மையாகக் கொள்ளப்படும். (5219)

## ஊனமுற்றவர் வாழ்வு மலர வாரிவழங்குங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எங்களிடம் ஒருபைத்தியக்காரன் வந்து குடியாயிருந்து கொண்டான். அப்போது என்ன செய்யவேண்டும்? அகிம்சைப்படி செய்யக்கூடிய சிகிச்சை யாது? இதற்கு எளிமையான விடை அவனைச் சுதந்திரமாக வாழ அனுமதிப்பதொன்றே யாகும்.

— மகாத்மாகாந்தி

# பொருளாதார உயர்வுக்கு பனைவள அபிவிருத்தி

## பயிற்சி வகுப்பில் உடுப்பிட்டி எம். பி.

(நெலவியடி)

"நாட்டின் இயற்கை வளங்களை மக்கள் வளத்துடன் ஒன்று படுத்துவதன் மூலமே நாட்டின் சுபீட்சத்தைப் பெற முடியும். வடபகுதியில் உள்ள இயற்கை வளமான பனைமரங்களை மக்கள் வளத்துடன் ஒன்றுசேர்க்க ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முன்வந்தது பாராட்டுதலுக்குரியதே ஆகும்"

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம். பனம் பொருள் அபிவிருத்திச் சபையால நெல்லியடியில் படித்த இளம் பெண்களுக்கான பனம் பொருள் பயிற்சி வகுப்பினை ஆரம்பித்து வைத்து சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் தெரிவித்தார்.

உடுப்பிட்டி- கட்டைவேலி தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனைச் சங்க தலைவர் திரு.வீ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இப் பயிற்சி வகுப்பில் திரு. த. இராசலிங்கம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"ஆங்கிலேயர் இந் நாட்டில் சில அபிவிருத்தித்திட்டங்களை புகுத்தியிருந்தார்கள். அவர்கள் தமக்கு உடனடியாக தேவைப்பட்டதும், சந்தை உள்ளதுமான தேயிலை, றப்பர், தெங்குத் தோட்டங்களை உருவாக்கினர்கள். ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்கள். ஆனல் நாட்டின் வடபகுதியில் இருந்த இவ் வியற்கை வளத்தினை பயன் படுத்தத் தவறி விட்டார்கள். இந்தத் தவறினை இலங்கையரும் கடந்த காலத்தில் புரிந்தனர். ஆனல் இன்றைய அரசாங்கம் பனையின் வளத்தினை பயன்படுத்தவும், அதன் மூலம் தேசப் பொருளாதார நிலையை உயர்த்தவும் முன் வந்தது,

பனம்பொருள் அபிவிருத்திச் சபைமூலம் இப்பணியை அரசாங்கம் செய்ய முன்வந்தது பாராட்டப்படவேண்டிய விடயமுமாகும். காலஞ்சென்ற டாக்டர் என். எம். பெரேரா இவ்வியற்கை வளமூலம் நாட்டில் சிறுமையுற்று, நசுக்கப்பட்டிருந்த சமூகங்களை முன்னேற்ற கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அத்திபாரம் இட்டிருந்தார் என்ருல் மிகையாகாது. இப் பயிற்சி முகாமில் பயிற்சி பெறுவோர் தமது ஓய்வு நேரங்களை பயன்படுத்தி பொருளீட்டக்கூடிய வாய்ப்புண்டு. சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்கு உதவுகின்ற வேளையில், தமது நிலையையும் ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். இங்கு குறைந்த வசதியுடன் பயிற்சி பெறவேண்டியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. உடுப்பிட்டித் தொகுதியில் நிரந்தரமான பனம் பொருள் பயிற்சி நிலையத்தினை சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் நிறுவித்தந்து தவ நான் தயாராகவுள்ளேன்" என்று குறிப்பிட்டார்.

பனம் பொருள் அபிவிருத்திச் சபை பதில் தலைவர் திரு. என். கனகசூரியர், இணைப் பதிகாரி எம். நடராசா, இயக்குநர் கே. வேலாயுதம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்கள். சுமார் 30 இளம் பெண்கள் இப் பனம்பொருள் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

### மக்கள் கருத்து

#### ஓடும் ரயிலில் கல்வீச்சு

கடந்த12-3-80 புதன்கிழமை மாலை காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த புகையிரதத்திற்குக் கொக்குவில் புகையிரத நிலயத்துக்கும், யாழ். புகையிரத நிலயத்துக்குமிடையில் பிறவுண் வீதி 1ம் ஒழுங்கையும் புகையிரதப் பாதையும் சந்திக்கும் கடவையில் சில காடையர்களினல் கற்கள் வீசப்பட்டன. வீசப்பட்ட கற்களினல் தாக்கப்பட்ட இரு புகையிரதப் பிரயாணிகள் பலத்தகாயத்துடன் வைத்திய காலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பதுடன் தங்கள் நேர்முகப்பரீட்சைக்கான பயணத்தையும் இடை நிறுத்திக்கொண்டனர். இந் நிலைமை தொடர்ந்தும் நடைபெருமல் இருப்பதற்குப் பொது மக்களாகிய நாம்உதவ வேண்டும். இவ்விதவிஷமிகளைக் கண்டுபிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்துவதன்மூலம் ஓரளவாவது இதனைக்கட்டுப் படுத்தலாமென நம்புகின்றேன்.

கே. சக்திவேல்
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

### கனடாவில் பயிற்சிபெறுவர்

(மன்னர்)

இலங்கை தேசிய இளைஞர் சேவை இயக்கம் தொடர்பாக மன்னர் மாவட்டத்திலிருந்து இருவர் கனடா சென்று 6 மாத காலம் பயிற்சிபெற தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நெடுங்கண்டலைச் சேர்ந்த செல்வி. சவிரியம்மா, திரு. செபமாலை ஆகிய இருவருமே தெரிவு செய்யப்பட்டவர்களாவர். கனடாவில் பயிற்சிபெற வடபகுதியில் இருந்து 8 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### கிறிஸ்தவ பஜனைக்கோஷ்டி

(மன்னர்)

சென்னையிலிருந்து வணபிதா பல்த்சார் தலைமையில் 12 பேர் அடங்கிய கிறிஸ்தவ பஜனைக் கோஷ்டி ஒன்று இம்மாதம் தலைமன்னர் வழியாகஇலங்கை வரவிருக்கிறது,

இக் கிறிஸ்தவ பஜனைக் கோஷ்டி மன்னர் மாவட்டத்தில் 5நாட்களாக தங்கி கிறிஸ்தவ பஜனை நடத்தவுள்ளது' இதனைத் தொடர்ந்து யாழப்பாணம் செல்லும்.

### புதிய தொல் பொருள் காட்சிச்சாலை

## 5 வருடங்களின் பின்னர் கட்டடம் பூர்த்தி பெறுகிறது!

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் அமைக்கப்பட்டு வரும் புதிய தொல்பொருள் காட்சிச்சாலை வேலைகள் பூர்த்தியாகும் நிலையிலுள்ளது.

முன்னுள் அமைச்சர் டாக்டர் எஸ்.குலதிலகா இக்காணியில் கட்டடம் அமைப்பதற்கு 75 ஆகஸ்ட் மாதம் அடிக்கல் நாட்டிவைத்தார்.

புதிய கட்டிடவேலைகள் பூர்த்தியாகியதும் யாழ்.பிரதான வீதியில் உள்ள தொல்பொருள் நிலயம் அங்கு இடம் மாறும் எனத் தெரியவருகிறது. [க]

### அரசாங்க எழுதுவினைஞர் சங்க

## யாழ். கிளை அலுவலகம் மீண்டும் ஒப்படைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ். கிளைத்தலைவர் திரு. த. நமசிவாயம், செயலாளர் திரு. வே. செல்வநாயகம் அரசாங்க லிகிதர் சங்க யாழ். கிளைத்தலைவர் திரு. வே. பொன்னம்பலம் செயலாளர் திரு. எஸ். கனகரத்தினம் ஆகியோர் எழுதுவினைஞர்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயகோனை நேற்றுமுன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினர்கள். இப்பேச்சு வார்த்தையின் போது யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி மேலதிக அரசாங்க அதிபர் திரு.எஸ்.எஸ். தர்மபாலன் ஆகியோர் உட்பட அரசாங்க அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தைகளின் போது பருத்தித்துறை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் எழுதுவினைஞர்கள் ஒருவருட காலம் மட்டுமே கடமையாற்ற அனுமதிப்பதாகவும் அரசாங்க ஊழியர்களுக்கு கஷ்டப்பிரதேசமாக கிளிநொச்சியை முன்னர் இருந்தது போல கணிக்க வேண்டுமென்றும் பொதுநிர்வாக அமைச்சைக் கோருவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்க தரைப்படையினரால் பொறுப்பேற்கப்பட்ட அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ். கிளையின் அலுவலகத்தை மீண்டும் பெற்றுத் தருவதாகவும் மாவட்ட அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு ஒரு வசதியான போசனசாலை அமைப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

[கொ]

## கல்வி அமைச்சருக்கு அ.பொ.சே.தொ.சங்கம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

"1960 ம் ஆண்டு பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றதிலிருந்து ஆசிரியரல்லாத ஊழியர்கள் பிரச்னைகளை அடுத்தடுத்துவந்த கல்வி அமைச்சர்களுக்கு எடுத்துக் கூறியும் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை,"

அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளைத் தலைவர் திரு. க. நவரத்தினம், கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்காவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

"அமைச்சர்களில், இளமை உணர்வோடு செயல்படும் நீங்கள் எங்கள் பிரச்னைகளைக் கவனிப்பீர்கள் என்பதால் அறியத்தருகிறேம்.

"1960 ம் ஆண்டு பாடசாலைகளைப் பொறுப்பேற்ற காலத்தில் இருந்த ஆசிரியரல்லாத ஊழியர்கள் தொகையே இன்னும் சேவையாற்றிவருகிருர்கள். புதிய நியமனங்களுக்கான காடர் உருவாக்கப்படவில்லை.

"சேவையினின்றும் இளைப்பாறியவர்கள், வேலையை ராஜினமா செய்தவர்கள் பதவி உயர்வு பெற்றவர்கள் ஆகியோருடைய இடங்கள் இதுவரை நிரப்பப்படவில்லை. மற்றைய அரச ஊழியர்களுக்குள்ள பதவி உயர்வு வாய்ப்புக்கள் பாடசாலை ஊழியர்களுக்கு கிடையாது.

"இன்று ஏனைய அரச ஊழியர்களுக்கு 5 நாள் வேலை நேரத்தில் மாற்றம் ஏற்பட்டு குறைந்த நேரம் சேவையாற்றுகிருர்கள். ஆனல் பாடசாலை ஊழியர்கள் 7-30-4-45 வரை சேவையாற்றவேண்டிய நிலையிலேயே உள்ளார்கள்.

20 வருடகாலம் குறிப்பிட்ட பதவியிலேயே இன்னும் சேவையாற்றுகிருர்கள். இளைப்பாறும்வரை தரம் உயர்வுக்குச் சந்தர்ப்பமே கிடையாது."

(க)

## "முன்மாதிரியாகத் திகழும் நாணய சங்கம்"

(மன்னர்)

"நாட்டிற்கு நலன் விளைவிக்கும் இயக்கங்களுள் கூட்டுறவு இயக்கமே மிகவும் சிறந்தது. கூட்டுறவு, ஐக்கியம், ஒத்துழைப்பு என்பன ஒரு பொருட் சொற்கள், இத்தகைய சங்கத்தை நமது உயிரெனப் போற்றுவதுடன் முன்னேற்றவும் முயற்சி செய்ய வேண்டும்."

இவ்வாறு எருக்கலம்பிட்டி ஐக்கிய நாணய சங்கத்தின் 23வது வருட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மன்னர் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எஸ். நித்தியானந்தன் கூறினர். மேற்படி பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் ஜனுப் எஸ்.கே. சாகுல் ஹமீது தலைமையில் நடைபெற்றது. மன்னர்கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எஸ். நித்தியானந்தன் தனது உரையில் தொடர்ந்து பேசுகையில்: "மற்ற நாணயச் சங்கங்களைவிட இச் சங்கம் நாணயத்துடன் திறம்பட நடந்து ஒரு முன்மாதிரியான சங்கமாகத் திகழ்கிறது. இதனை யொட்டி சங்கத்தையும் அதன் நிர்வாகிகளையும் பாராட்டுகிறேன்" என்ருர்.

மன்னர் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்ணுண்டோ தமது உரையில் "நீங்கள் உங்களது சங்கத்திற்குச் சொந்மான கட்டிடம் நிறுவ இருப்பதால் அதற்குரிய காணியை வழங்க நடவடிக்கை எடுப்பேன். இச்சங்கத்தின் முன்னேற்றத்தை யறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இச்சங்கத்தின் நாணயத்தையும், ஐக்கியத்தையும் தொடர்ந்தும் நிலைபெறச் செய்யுமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்ருர்.

### மன்னர் புதிய பஸ்நிலையம்

(மன்னர்)

மன்னரில் நிறுவப்படவிருக்கும் புதிய பஸ்நிலையத்திற்கான அடிக்கல்லை போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம். எச். முஹமட் இவ்வாரம் நாட்டிவைப்பார். இவ் வைபவத்தில் மன்னர் மாவட்ட அமைச்சரும், மூதூர் எம். பியுமான ஜனுப் எம். ஈ. எச். மஹ்றூப், மன்னர் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்ணுண்டோ உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

ஊனமுற்றவர் வாழ்வு சிறக்க உதவும் கரங்கள் உதவட்டும்.

PEC

புரோமோட்டர்ஸ் என்ஜினியறிங் கொம்பனி லிமிட்.,
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். லயன்ஸ் கழக "உதவும் கரங்கள்"

## வலது குறைந்தோர்க்கு விடுதலை

உலகின் பலபாகங்களிலும் கடந்த சில ஆண்டுகளுள் குறிப்பிடத்தக்க விடுதலை இயக்கங்கள் உருவெடுத்துள்ளன.

காலனி ஆட்சிகளில் நசுக்கப்பட்ட மக்களின் விடுதலையைக் கண்டுள்ளோம். தோலின் நிறத்தாலும் சாகியத்தின் காரணத்தினுலும் வேற்றுமை காட்டி நசுக்கப்பட்ட கறுப்பரின் விடுதலை இயக்கம் ஏறக்குறைய இருபதாண்டுகளுக்கு முன் எழுந்தது. மேலும் பால் காரணமாக வேற்றுமைப் படுத்தி ஒடுக்கப்பட்ட பெண்கள் விடுதலை இயக்கம்தோன்றியது. பிள்ளைகளைப் பிள்ளைகளாக வாழவிடாது பெரியோர் உலகின் தராதரங்களைத் திணித்து அடிமைப்படுத்தப்பட்ட பிள்ளைகளின் விடுதலைக்கான சிறுவர் ஆண்டை முடித்து நிற்கிறோம். இன்று நாம் உடற்குறைவினுல் சமுதாயத்தினுற் புறக்கணிக்கப்பட்ட வலது குறைந்தோரின் விடுதலைக்காக அவர்களுக்கும் உரிமையான முழுமையான வாழ்க்கையை வாழும் சந்தர்ப்பத்தை அளிப்பதற்காகப் போராட முன்வந்துள்ளோம்.

ஹெலன் கெலர் என்ற அமெரிக்கப் பெண்மணி அசாதாரண அங்கக்குறைவுகளிருந்தும் அதன் கட்டுகளிலிருந்து விடுதலை பெற முடியுமென்பதற்கு அதி சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். அவர் விழிப்புலன் செவிப்புலன் இரண்டும் இழந்தவர். எனினும் உலகிலே முழுமையடைந்த மிகச்சிறந்த பெண்மணியாகத் திகழ்ந்தார். விழி,செவிப்புலன்கள் அற்றவராயினும் கற்பனையின் மூலம் நிறங்கள், ஒலிகளின் உட்கருத்தைப் பெற்றிருந்தார். அவர் அந்நிலையடைவதற்கு ஆக்கமும்அக்கறையும்நிறைந்த சமுதாயத்தில் பிறந்தது அவர் அதிர்ஷ்டமாகும் அதிலும் மேலான அதிர்ஷ்டம் அக்கறையுள்ள பெற்ருருக்குப் பிறந்ததாகும். அதிர்ஷ்டத்திலும் அதிர்ஷ்டம், ஊக்கமும் உற்சாகமும், ஆக்கமும் அர்ப்பணமும் அதிகளவு தன்னிற் கொண்ட ஆன் சலிவன் என்ற ஆசிரியையைப் பெற்றதேயாகும்.

சில மாதங்களுக்கு முன் அமெரிக்காவில் வண. கலாநிதி ஹரல்ட் வில்க்கி என்பவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் இரு கைகளுமின்றிப் பிறந்தவராகும். ஆயினும் ஊக்கமும் அக்கறையுமுள்ள பெற்ருருக்குப் பிள்ளையானதால், தனது பாதங்களினுலே எழுதவும், சாப்பிடவும் பழகிக்கொண்டார். பாதங்களினுல் எழுதுவதனுல் முதலில் நல்ல நகர்ப் பாடசாலைகளில் அனுமதி மறுக்கப்பட்டாலும் பின் சர்வகலாசாலைகளிற் படித்துக் கலாநிதிப் பட்டமும் பெற்ருர். வியட்னும் யுத்தத்தில் அங்கங்களை இழந்த 300,000 பேருக்கு ஆசாரியனுக கடமையாற்றினுர். உலகம் முழுவதும் சென்று வலது குறைந்தோரின் விடுதலை இயக்கங்களை அமைத்துள்ளார். நல்ல குடும்பவாழ்க்கையிலும் ஈடுபட்டு இன்று அவரது புதல்வன் அமெரிக்காவில் ஒரு ஆலயத்திற் போதகராகக் கடமையாற்றிவருகிருர்.

மேற்கு நாடுகளில் வலது குறைந்தோருக்காகச் செய்யப்படும் வசதிகள் மிகக் குறிப்பிடத்தக்கது பாடசாலைகள், சர்வகலாசாலைகள் ஆலயங்கள் முதலான பொதுஇடங்கள் சக்கரநாற்காலியிற் செல்வோர் வசதிக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது. பேராசிரியர்கள், போதகர்கள் சக்கரநாற்காலியிற் சென்று தங்கள் கடமைகளைச் சாதாரண மனிதரைப போல் செய்வது சர்வ சாதாரண காட்சியாகும். அங்கக்குறைவுள்ள மாணவர் ஒதுக்கப்படாது சாதாரணப் பாடசாலையிலேயே கல்வி பயிலுகின்றனர். கண்ணிழந்தோரை வழிநடாத்துவதற்கென அல்சேசன் நாய்களுக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சக்கரநாற்காலியிலுள்ளோர் விளையாடுவதற்கு விசேட வலைப்பந்தாட்ட முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எத்தனையோ விதமான தொழில்கள் வலதுகுறைந்தோருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுஸ்தாபனங்களிலும், போக்குவரத்துச் சாதனங்களிலும் அங்கம் குறைந்தோருக்கென விசேடவசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆதலின் அவர்கள் அதிக கஷ்டமின்றிச சமுதாயத்திலே நடமாடுகிருர்கள்.

யாழ்ப்பாணத்தில் இப்படியான அக்கறையுள்ள,பகிர்ந்து கொள்ளும், சுகப்படுத்தும் சமுதாயத்தை உருவாக்குவது எமது கடமையாயுள்ளது. இவ்வுணர்வுள்ளவர்களாக சேவை மனப்பான்மை கொண்டவர்களாக மாறுதற்குப் பிள்ளைகள், வாலிபர், பெரியோர் யாவரும் கற்பிக்கப் படல் வேண்டும். வலது குறைந்தோரின் வாழ்க்கையை வளம்படச்செய்வது எமது கடமையாகும். உடற்தேவைகள் மட்டுமன்றி உள்ளம், ஆன்மா தேவைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும். கலாச்சார ஈடுபாடுகளுக்குச் சந்தர்ப்பங்களும் பொழுது போக்கு வசதிகளும் கொடுக்கப்படல்வேண்டும்.

நமது மத்தியிலும் வேலணை திரு. தனிநாயகம் போன்று படித்த வலது குறைந்தோன் இருந்தது நமது சிலாக்கியமே அவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான மாணவனுக படித்தபோது ஒரு சுகவீனத்தினுல் கை கால்களின் வலுவை இழந்தார். ஆயினும் அங்கக்குறைவின் கட்டுகளிலிருந்து விடுபட தைரியத்துடனும் விடாமுயற்சியுடனும் போராடினுர். இவர் மிகுந்த புத்திசாதுரியமும் நற்பண்பும் ஊக்கமும் கொண்டவர். அவரது சமயப் பற்றுதலும் மற்றைய னிதரில் காட்டிய அக்கறையும் எம்மை வெட்கச் செய்கின்றன. உலகின் பல பாகங்களிலும் வலது குறைந்தோருக்காக உழைக்கும் தனிநபர்களோடும், ஸ்தாபனங்களோடும் அதிகமான சிறந்த கடிதத் தொடர்பு வைத்திருந்தார். அவரது ஊக்கமும் முன்மாதிரியுமே எம்மை யாழ்ப்பாணத்தில் ஒரு வலது குறைந்தோர் புனர்வாழ்வு இல்லம் அமைக்கத் தூண்டியது.

தனிநாயகம் இன்று எம்மத்தியில் இல்லை. அவரது ஊக்கம் எம்மை உந்தித்தள்ள இன்று ஒரு வலது குறைந்தோர் புனர்வாழ்வு இல்லம் அமைக்கப்படுகின்றது இது தனிநாயகத்தின் வெற்றி என்றே கூறவேண்டும். இவ்வுலகில் அவரது கடமை முடிந்தது. நினைத்த கருமத்தை வெற்றியோடு முடித்துத் தான் இறைவனடி சேர்ந்தார்.

வலது குறைந்தோர் வாழ்வு மலரட்டும்.

**ராஜன் கதிர்காமர்**
(அதிபர்-யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டை)

## யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் வாழ்த்துகிறார்

யாழ். நகரில் வலதுகுறைந்தோர்க்காக, யாழ். லயன்ஸ் கழகம் ஒரு புனர் வாழ்வளிக்கும் நிலையமொன்றை அமைப்பதையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். நாடு பூராவும் லயன்ஸ் கழகங்கள் ஆற்றிவரும் சேவையை நான் அறிவேன். குறிப்பாக யாழ். லயன்ஸ் கழகம் ஆற்றிவரும் சேவை பாராட்டுக்குரியது.

புனர் வாழ்வு நிலையம் யாழ். நகரில் அமைக்கப்பட்டுள்ளதால், இப்பகுதி மக்கள், யாழ். லயன்ஸ் கழகத்துக்கு என்றுமே நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என நம்புகிறேன்.

**யு பி. விஜயக்கோன்**

## யாழ். லயன்ஸ் கழகத்தின் அழியாச்சின்னம்
### மாவட்ட ஆளுநர்

வலது குறைந்த மக்களுக்காக,யாழ் லயன்ஸ் கழகம் ஒரு புனர்வாழ்வு நிலையத்தை ஆரம்பித்தது ஒவ்வொரு லயன்ஸ் அங்கத்தவரையும் பெருமைப்படுத்தும் விடயமாகும்.

வ்விலப் துயருறும் மக்களுக்கு நல்வாழ்வளிக்கும் இல்லமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை [illegible] ஒரு சிறந்த பணியினை மேற்கொண்டதற்கு யாழ் லயன்ஸ் கழகத்தைப் பாராட்டுகின்றேன்.

[illegible]பகுதியில் வாழும் மக்கள் யாழ் லயன்ஸ் கழகத்துக்கு நன்றியுடையதாக இருக்குர், வ்வில்லம்,யாழ் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்தவர்களின் சேவையைபெருமிதப்படுத்தும் அழியாச்சின்னமாக இருக்கும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை

லயன் டாக்டர் பிள்யு
ஏ. பேர்டினன்ட்,
மாவட்ட ஆளுநர்
லயன்ஸ் கழகம்.

## துயருறும் மக்களுக்கு வாரி வழங்குங்கள்
### யாழ். லயன்ஸ் தலைவர்

இப்பகுதியிலுள்ள வலது குறைந்தோர்க்கு ஒரு புனர் வாழ்வு இல்லம் திறக்கப்படும் சரித்திர பூர்வமான நிகழ்ச்சிக்கு செய்தி கொடுப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

வலது குறைந்த மக்களின் துயரை நான் நன்கறிவேன். கடந்த நான்கு வருடங்களாக உதவும் கரங்கள் திட்டத்தின் கீழ வலது குறைந்த மக்களுக்கு லயன்ஸ் கழகம் மூன்று சில்லு வண்டிகளைக் கொடுத்துதவியது.

துயருறும் மக்களுக்கு இன்று ஒரு இல்லம் அமைப்பது பற்றி மகிழ்ச்சியடைகின்றோம். இது ஒரு ஆரம்பமே. இப் புனர் வாழ்வு இல்லத்தை நன்கு பராமரிப்பதற்கு மேலும் பணம் தேவை.ஒவ்வொரு பிரஜையும்,இத்துயருறும் மக்களை ஆதரிப்பது கடன் அவர்களும் வாழத்தான் வேண்டும்.

அவர்கள் தங்கள் சக்தியை கொண்டு தாங்களாகவே வாழ்க்கையை நடாத்த வேண்டும்.

இந்த எண்ணத்தைமனதில் வைத்து இப்பகுதியில் வாழும் பெரியோர்கள் நன்கொடைகளை வாரிவழங்க வேண்டும் என்றுகேட்டுக் கொள்கிறேன்.

லயன் டாக்டர்
எஸ். சபாரத்தினம்,
தலைவர்,
யாழ் லயன்ஸ் கழகம்



## சரித்திரசாதனை நிவர்த்தி
### சமூக சேவை அத்தியட்சகர் செய்தி

'யாழ். லயன்ஸ்' கழகத்தினர் இன்று அங்கவீனர்களுக்கென ஒரு புனர்வாழ்வு நிலையத்தை ஆரம்பித்துவைப்பதன் மூலம், யாழ். மாவட்டத்தில் சமூகசேவைப்பணியின் சரித்திரத்தில் பல காலமாக இருந்துவந்த குறைபாட்டினை நிவர்த்தி செய்வதோடு, இதுவரை காலமும் வேறு எந்தத் தனியார் சமூகசேவை நிறுவனமும் சாதிக்கமுடியாத ஒரு சிறந்த சாதனையை நிலைநாட்டியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பல எதிர்நீச்சல்களையும், சவால்களையும் சமாளித்து முன்னேறவேண்டிய நிலையிலுள்ள இச்சிறந்த பணிக்கு, சமூகசேவை நலன்களில் நாட்டமுள்ளவர்களின் நல்லாசிகளும், ஒத்துழைப்பும் தாராளமாக நல்கினுல்தான் நலிவுற்ற நம்மவர்க்கு நயமும் நல்வாழ்வும் கிட்டும்

யாழ். மாவட்டத்திலே அங்கவீனர், செவிப்புலனற்ருேர், வாய் பேசாதோர், கண் பார்வையற்ருேர், மனோ வளர்ச்சி குறைந்தோர் என்ற பாகுபாட்டின அடிப்படையில் நாம் திரட்டிய புள்ளிவிபரங்களின் பிரகாரம் ஆண் பெண் சாராருட்பட, 'வலது குறைந்தோர்' என்ற பட்டியலில் 600க்கும் அதிகமானேர் இருக்கிருர்கள். அவ்வப்போது அன்ருடத் தேவைகளை மட்டும் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் உதவும் சிறு பண உதவியால் மட்டும் இவர்களின் வாழ்வினை வளம்படுத்தமுடியாது. தத்தமது ஆற்றல்களுக்கும், அறிவுக்கும் ஏற்றவாறு தாமும் தம்மாலியன்ற பணிகளில் தம்மை ஈடுபடுத்தி, சுயமரியாதையோடும் தன்னம்பிக்கையோடும் வாழத்துடிக்கும் இவர்களுக்கு 'உதவும் கரங்களாக'த் தோன்றியுள்ள 'லயன்ஸ் கழகத்தினர்' இவர்களுக்குப் புகலிடம் மட்டும் அளிப்பதோடு நில்லாது பொருத்தமான தொழிற் பயிற்சி, திட்டங்கள், சமய, கலாசார வளர்ச்சிக்கேற்ற வசதிகள் போன்றவற்றையும் ஒரே இடத்தில் அமைத்துக்கொடுத்துப் படிப்படியாக ஒரு பாரிய புனர்வாழ்வுத் திட்டத்தைச் செயற்படுத்தும் சீரிய நோக்குடன் ஆரம்பிக்கும் இந்த நிலையம் ஒரு முதல் மைல்கல்லாக அமைகிறது.

[illegible] தமது 'உதவும் கரங்கள்' எனும் பயனுள்ள சிறந்த சேவைத் திட்டத்தினை உருவாக்கி அதன், மூலம் உடல் ஊனமுற்ருேருக்கும், கட்புலன் செவிப் புலனற்ருேருக்கும் தேவையான மூன்று சில்லுச் சைக்கிள்கள், உபகரணங்கள், கல்விச் சாதனங்கள் கொடுத்தும், கிராம அபிவிருத்தி போன்ற சேவைத் திட்டங்களில் ஈடுபட்டும் உதவிய லயன்ஸ் கழகத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

சமூகப் பணியின் தன்மையும், செயல் திட்டங்களும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியோடு ஒன்றிணைந்து இயங்கவேண்டிய தேவைகளை வற்புறுத்தும் இன்றைய நிலையில் லயன்ஸ் கழகத்தினரின் சாதனைகளும், எதிர்காலத் திட்டங்களும் மிகப் பொருத்தமானதும். பயனுள்ளதுமான பணியாக அமைவதோடு, சமூகப் பணிகளுக்குத் தம்மை அர்ப்பணிக்கக் காத்துநிற்கும் தனி நபர்களுக்கும் மற்றைய சேவை ஸ்தாபனங்களுக்கும் இது ஒரு எடுத்துக்காட்டாகவும் இருக்கும்.

**க. கங்காதரன்**
சமூகசேவை உதவி அத்தியட்சகர்,
யாழ்ப்பாணம்.

## 'உதவும் கரங்கள்' புனர்வாழ்வுநிலைய அமைப்புச் செயற்குழு

லயன் எம். ஜே. ஏ. ஜெயநாதன் (தலைவர்), லயன் எஸ். சிவஞானம் (இணைத் தலைவர்), லயன் ஜே. எஸ். டேவிட் (செயலாளர்), லயன் டாக்டர் எஸ். சபாரத்தினம், லயன் எல். ஆர். முத்தையா, லயன் டாக்டர் யோகு பசுபதி, லயன் செ. மகேசன், லயன் எஸ். யோகசோபாலகிருஷ்ணன், லயன் எஸ். செபஸ்தியாம்பிள்ளை, லயன் இம்மானுவல் ஜோசப், லயன் எஸ். வைத்தியநாதன், லயன் சி. கே. குணநாயகம், வண. வெஸ்லி அரியராஜா, திரு. கே. கங்காதரன், திரு. கு. நேசையா, திரு. ராஜன் கதிர்காமர், திரு. எஸ். முத்துலிங்கம்.

## வலது குறைந்தோருக்கு வரப்பிரசாதம்
### மேயர் வாழ்த்து

சர்வதேச சேவை இயக்கத்தின் பிராந்தியக் கிளையாக அமையும், யாழ். அரிமாக் கழகம் இப்பகுதியிலுள்ள வலது குறைந்தவர்களின் புனர்வாழ்வில் கொண்டிருக்கும் சிரத்தைக்கு தகுந்ததோர் எடுத்துக்காட்டு, யாழ். கில்னர் மண்டபத்தில் இன்று மேற்படி கழகம் ஆரம்பித்து வைக்கும் வலது குறைந்தோருக்கான வதிவிடம்.

எனவே, யாழ். அரிமாக் கழகத்தினரின் இம்முயற்சி பாராட்டப்பட வேண்டியதே! வலது குறைந்தவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டத்தின் ஓர் அம்சமாக, யாழ். கில்னர் மண்டபத்தில் வலது குறைந்தோர்களுக்கான வதிவிடம் ஒன்றைக் கழகம் ஆரம்பித்து வைப்பதை முன்னிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

யாழ். அரசினர் வைத்தி[illegible] சாலையில், புற்றுநோய் சிகி[illegible]சைக்கான 'கோபோல்ற்' கூ[illegible] இன்மையால், யாழ்ப்பாண[illegible] மாவட்டத்திலுள்ள நூற்று[illegible] கணக்கான புற்றுநோயாள[illegible] சிகிச்சையின் பொருட்டு ப[illegible] ரகம செல்வதில் [illegible] தொல்லைகள், தொ[illegible] தணிப்பதற்காக, [illegible] யாளர்களுக்கான [illegible] மண்டபம் ஒன்றையும் யாழ் 'கோபோல்ற்' கூறையும் [illegible] அரசினர் வைத்தியசாலையில் [illegible] நிறுவித் தருவதற்கும் பொருட்டு, [illegible] டங்களில், யாழ். அரிமாக்கழகத்தினர் களியாட்ட விழாவை[illegible] யும், மேடை நாடகங்களை[illegible] யும் நடத்தியதை யாழ்ப்பா[illegible] மக்கள் பொது நன்றி உணர்வுடன் நினைவுறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ங்கள்"

# புனர்வாழ்வு இல்லம் - திட்டமிடல் நிலையம்

## இல்னர் மண்டபம், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## ழகத்தின் ன்னம் நநர்

பகுதியில் வாழும் யாழ் லயன்ஸ் கழகத் நன்றியுடையதாகஇருக் வ்வில்லம், யாழ் லயன்ஸ் தைச் சேர்ந்தவர்களின் யைபெருமிதப்படுத்தும் ச்சின்னமாக இருக்கும் தில் எதுவித தசந்தேகமு

யன் டாக்டர் டபிள்யு.
ஏ. பேர்டினன்ட்,
மாவட்ட ஆளுநர்
லயன்ஸ் கழகம்.

## ங்களுக்கு ங்கள் தலைவர்

தேவை.ஒவ்வொரு பிர ம்.இத்துயருறும் மக்களை பது கடன் அவர்களும் தான் வேண்டும்.

ர்கள் த்ங்கள் சக்தியைக் டு தாங்களாகவே கையை நடாத்த வேண்

த எண்ணத்தைமனதில் து இப்பகுதியில் வாழும் யார்கள் நன்கொடை வாரிவழங்க வேண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

லயன் டாக்டர்
எஸ். சபாரத்தினம்,
தலைவர்,
யாழ் லயன்ஸ் கழகம்

## யாழ். அரசாங்க அதிபர் வாழ்த்துகிறார்

யாழ். மாவட்டத்தில் லயன்ஸ் கழகம் பல துறைகளிலும் ஆற்றிவரும் தொண்டு நாளுக்கு நாள் அதிகரித்து பலரது பாராட்டையும், பெரு மதிப்பையும் பெற்றுவருகின்றது. இவ்வகையில் இன்று அங்கவீனர்கட்கென அமைக்கும் 'புனர்வாழ்வு இல்லம்' மனிதாபிமானமுள்ள அனைவரது உள்ளத்தையும் ஈர்த்து, பேருவகையடையச் செய்கின்றது.

தம்மைச் சுற்றி நாலாபுறத்திலுமுள்ளவர்கள் ஓடியாடி மகிழ்ந்துஉலாவ தாம் மட்டும் முடங்கி, ஒடுங்கி, பிறருக்குச் சுமையாக இருக்க வேண்டிவந்ததே என, விதியை நொந்து, விரக்தியடையும் எல்லையில் தவிக்கும் அங்கவீனர்கட்கு, தமக்கும் என ஒரு எதிர்காலமும், நல்வாழ்வும் உண்டு என நம்பிக்கையுடன் நிமிர்ந்து நின்று பிரச்சினைகளை எதிர்நோக்கி வெற்றி கொள்ளத் தேவையானஆக்கபூர்வமான அடிப்படைத் தேவைகளையும், பயிற்சிகளையும் இப்புனர் வாழ்வு இல்லம்மூலம் வழங்க முன்வந்த யாழ் லயன்ஸ் கழகத்தின் இம்முயற்சி ஞாலத்தின் மாணப்பெரிது என்றால் அது மிகையாகாது.

யோகேந்திரா துரைசுவாமி

# "நிம்மதியளிக்கும் நிலையமாக இது செயல்படும்"

ஊனமுற்றோர் வாழ்வில் இன்று மகிழ்ச்சிகரமான ஒரு நாளாகும். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஊனமுற்றவர்களாகிய நீங்கள் எம்மைப் பணித்ததன்பேரில் எமது கழகத்தின் "உதவும்கரங்கள்" திட்டத்தில் இந்த பணியினை அமைக்கின்றோம்.

கடந்த காலங்களில் ஊனமுற்றவர்கள் சுயமாக சம்பாதித்து மற்றைய மனிதரைப் போல, வாழ நெஞ்சுரம் இருந்தும் அதற்கான சந்தர்ப்பத்தைதான். கால்களால் நடக்க முடியாத நிலையிலும் தட்டச்சு மூலம் தனது கருத்தை எமக்கும் உலகுக்கும் எடுத்துக்காட்டினார்.

இந்த பணியைப் பூரணப்படுத்துவதற்கு சுமார் 3,00,000 ரூபாய் நிதி தேவைப்படுகிறது. இருந்தும் 40,000 ரூபா செலவில் ஆரம்ப நடவடிக்கையாக 10 பேருக்கு சகல வசதிகளையும்கொண்ட மனையை இன்று திறக்கின்றோம்.

யாழ் மாவட்டத்தில் 500க்கு

### லயன் எம். ஜே. ஏ. ஜெயநாதன்

(பிராந்திய முகாமையாளர், இலங்கை வங்கி யாழ்ப்பாணம்)

தலைவர், புனர்வாழ்வு நிலைய அமைப்பு செயற்குழு

உங்களுக்கு யாரும் வழங்கவில்லை.

உங்கள் நிலையை நன்கு ஆராய்ந்தோம். ஊனமுற்றோர் வாரம் ஒன்றை கழகம் ஏற்படுத்தி அதன்மூலம் பல பொதுநல ஸ்தாபனங்களையும், பொருள்வளம் படைத்தவர்களையும் நாடி உதவி கோரினோம். இந்த மனை அமைவதற்கு முன்னோடியாக இருந்தவர் உங்களைப் போல ஊனமுற்றவர், அமரர் தனிநாயகம் மதிகமான ஊனமுற்றவர்கள் இருக்கிறார்கள். சிலர் வெளியில் சுயமாக சம்பாதிக்கிறார்கள். பலர், இன்னல்களுக்கு மத்தியில் சோதனையுடன் வாழ்கிறார்கள்.

நாம் கடந்த ஐந்து ஆண்டுகளில், எமது 'உதவும்கரங்கள்' திட்டத்தில், 20 மூன்றுசில்லு சக்கரவண்டிகளை கொடுத்துதவினோம், இதனால் எமக்குப் பூரண திருப்தி ஏற்படவில்லை. உங்களையும் மனித சமுதாயத்தில் சரிசமமானவர்களாக மதிக்கும் நிலையை உருவாக்கி கொடுப்பதற்காக, "செஷயர் ஹோம்" என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் ஊனமுற்றவர்களுக்கான புனர்வாழ்வு இல்லத்தை, யாழ்ப்பாணம் காங்கேசன்துறை

(8-ம் பக்கம் பார்க்க)

## 'யோகேஸ்' வாழ்த்து

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினர் ஊனமுற்றவர்களுக்கு ஒரு புனர்வாழ்வு இல்லத்தையும்-அவர்களுக்கான திட்டமிடல் நிலையத்தையும் இன்று திறப்பதையிட்டு மனமார வாழ்த்துகின்றேன்.

இந்நிலையம் தமிழ்ப்பகுதியில் நிறுவப்படும் முதலாவது நிலையமாகும். லயன்ஸ் கழகத்தின் 'உதவும் கரங்கள்' திட்டத்தில் இந்நிலையம் அமைக்கப்பட்டாலும், இந்நிலையத்தின் வளர்ச்சியால், ஒவ்வொரு தமிழ்மகனும் முழுப்பங்கு கொண்டு லயன்ஸ் கழகத்திற்கு கைகொடுத்து உதவவேண்டும்.

எமது இனம் பலவழிகளிலும் இன்னலுறுகிறது. இந்நிலையில் எமது இனத்தின் விடிவுக்காக சகலவழிகளிலும் சுயமாக முன்னேறும் வழிகளை நாம் காணவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

– வெ. யோகேஸ்வரன்
டா. உ. யாழ்ப்பாணம்.

## உங்களுக்கு சிலஆலோசனைகள்

(வலது குறைந்த ஒருவரைச் சந்திக்கும்போது அவருடன் நட்பைத் தொடக்கவும் வளர்க்கவும் சில குறிப்புக்கள்)

1. வலது குறைந்தவனும் ஒரு மனிதன் என்பதை மனதிற்கொள். அவனுடைய அங்கக்குறைபாட்டைத் விரபற்றெல்லா விடயங்களிலும் அவன் சாதாரண மனிதனைப் போன்றவன்.

2. வலது குறைந்தோரிடம் குறைபாடு இல்லாததுபோல் மறைத்தலும், பறைதலும் நண்பர்களுக்கிடையே அவசியமற்றது ஆனால் நண்பர்களாகும்வரை அவரின்பால் ஒரு மனிதன் என்ற முறையில் அன்பாகப் பழகு.

3. வலது குறைந்தோரை சந்திக்கும்போது உன் வழமையான சுபாவத்துடன் இரு.

4. சாதாரண மனிதனுடன் பேசும் அதே விடயங்களைப் பற்றி வலதுகுறைந்தோருடனும் பேசு.

5. எப்பொழுதும் அவர்களுக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிரு; ஆனால் உதவி கேட்கும்போது மட்டுமே செய்; அல்லது உதவி அவசியமா எனக் கேள்.

6. பொறுமையாய் இருந்து அவர்களின் இயல்பான வேகத்தில் நடக்கவோ பேசவோ விடு.

7. வலதுகுறைந்தோரோடு சிரித்துப் பேசி மகிழத் தயங்காதே.

8. வலதுகுறைந்த ஒருவனை காணுமிடத்து விசித்திரப் பிறவியை பார்ப்பது போல் நின்று முறைக்காதே. சாதாரண மனிதன் ஒருவன் பெறும் அதே உபசாரத்தைப் பெறுவதற்கு அவனுக்கும் தகுதியுண்டு.

9. அளவுக்கு மீறிய பாதுகாத்தலையும் பரிதாபபட்டுதலையும் தவிர். பரிதாபம் கலந்த அன்பை அவன்மேல் பொழியாதே

10 அவர்களிடம் விரும்பத்தகாத கேள்விகளைக்கேளாதே. தனது குறைபாட்டைப் பற்றி பேசவேண்டுமெனில், குறைபாடு உள்ளவரே பேசத் தொடங்குவார்.

11. பிச்சை போடவோ பரிதாபம் காட்டவோ தேவையில்லை அவன் சாதாரண மனிதனைப் போல சமமாக மதிக்கப்படுவதையே விரும்புகிறான். அவன் தனது ஆற்றலைக் காட்டுவதற்குச் சந்தர்ப்பம் கொடு.

12. சக்கர நாற்காலியையோ ஊன்றுகோலையோ வலது குறைந்தோனிடமிருந்து பிரிக்காதே அது எந்நேரமும் அவனுக்கு தேவைப்படும்.

13. வலது குறைந்த ஒருவருடன் சாப்பிடும்போது அவரது உணவை குழைத்துவிடவோ, அள்ளிக்கொடுக்கவோ முயற்சிக்காதே. அவர் தேவையேற்படும்போது கேட்பார்.

14. வலது குறைந்தவனைப் பற்றிய பொது அபிப்பிராயத்தை உன் மனதில் இருந்து அகற்றிவிடு. அவருடைய ஆற்றலும், திறமையும் சாதாரண மக்களைப்போன்றே இருக்கும்.

15. வலது குறைந்தோருடன் நட்பை இன்பமாக அனுபவி. அவனுடைய கொள்கைகளும், நகைச்சுவைப்போக்கும் உனக்கு புத்துணர்வை அளிக்கும்.

லயன் ஜே. எஸ். டேவிட்
[அதிபர் நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை]



## ந்தோருக்கு ாதம் ழ்த்து

யாழ். அரசினர் வைத்திய லையில், புற்றுநோய் சிகிச்க்கான 'கோபோல்ற்' கூறு மையால், யாழ்ப்பாண வட்டத்திலுள்ள நூற்றுக் க்கான புற்றுநோயாளர் சிச்சையின் பொருட்டு பஹம செல்வதில் ஏற்படும் ல்லைகள், தொல்லைகளைத் ணிப்பதற்காக, புற்றுநோ ளர்களுக்கான சிகிச்சை ண்டபம் ஒன்றையும், கோபோல்ற்'கூறையும் யாழ். ரசினர் வைத்தியசாலையில் றுவித் தருவதற்கு நிதி சேர்க் ம் பொருட்டு, கடந்த வரு ங்களில், யாழ். அரிமாக்கழ த்தினர் களியாட்டு விழாவை ம், மேடை நாடகங்களை ம் நடத்தியதை யாழ்ப்பா ணப் பொது மக்கள் நன்றி ணர்வுடன் நினைவுறுகிறார் கள்.

# உதவும் கரங்களால் ஊனமுற்றவர் வாழ்வு மலரட்டும்

ஆஹா, என்ன அதிசயம்... இந்த உலகத்தில் இருப்பவர்கள் எல்லாரும் நல்லவர்கள். எல்லோர் மீதும் அன்பு செலுத்துபவர்கள்.

"அம்மா" என்று அழைத்த குரலுக்கு தாய்மை உணர்வுடன் நோக்குபவர்கள்.

கண்ணீர் விட்டால் கலங்குபவர்கள்.

கண்முன்னே மனதைநெகிழ வைக்கும் நிகழ்ச்சியைக் கண்டுவிட்டால், பரிதாபப்படும்சுபாவம் கொண்டவர்கள்.

வாழ்வில் எமக்கு எதுவும் நேர்ந்துவிடக் கூடாதென அல்லும் பகலும் இறைவனை வேண்டுபவர்கள்.

நாம் எதை எப்படி நினைத்தாலும் அது அப்படி நடப்பதில்லை- இது இறைவனின் ஆத்மசோதனை.

சிலர் சிரிக்கிறார்கள்; பலர் கதறியழுகிறார்கள்- இது வாழ்வின் இரகசியம்.

பஞ்சணையில் நெஞ்சை நிமிர்த்தி தூங்குபவனுக்கு அமைதியில்லை.

பாய் விரித்துப் படுப்பவன், மனநிறைவோடு தூங்குகிறான்.

வசதி படைத்தவன், மருத்துவமனையில், உயிருக்காகப் போராடுகிறான்.

ஏழையொருவன், அல்லும் பகலும் நடைபாதையில் ஒரு சாண் வயிற்றுக் கஞ்சிக்காக போராடுகிறான்- இது மனித நியதி.

நிம்மதியற்றவாழ்வில் மனிதனுக்கு எவ்வளவுஅகங்காரம்.

ஐந்துசதம் கேட்டால், சீ, நொண்டி, முண்டம், தூரப்போ என சினக்கிறான்.

ஏன் இந்த நிலை.

பரிதாபப்பட்டவன், ஐந்து சதத்துக்கு 10 சதமல்லவா கொடுக்கிறான். அவனுக்குப் புரிகிறது.

இன்று அவன், நாளை நான் என்று எண்ணுகிறான்.

ஊனமுற்றவர் பிறப்பிலே அப்படிப் பிறக்கவில்லை.

காலமாற்றம் அவரை ஊனமுற்றவனாக்கிவிட்டது.

என் சகோதரனுக்கு அப்படியொன்று வந்துவிட்டால், எண்ணவே மனது கூசுகிறது.

"ஐயோ! கடவுளே இது என்ன சோதனை" யென்று, வேண்டாததெய்வமிருக்காது.

'எதற்காக, அவனை தூற்றுகிறீர்கள். ஐந்து சதம் தானே கேட்டான். கொடுத்தால் என்ன குறைந்தாபோய்விடும்,

## ஸச்சி

சில நிமிடங்களில் அவனைத் திட்டினோமே. அவனது மனம் என்ன வேதனைப்படும்.

இறைவன் வகுத்த அறம் இதுதானா.

அவனும் மனிதன்தான். அவனால் சுயமாக சம்பாதித்து வாழமுடியும். வாழவழியைக் காட்டுங்கள், பார்க்கலாமென்று, அவர் கூறிய இனிய வாசகங்கள் என் காதில் ஒலிக்கின்றது.

உண்மையில் உலகநாடுகளில் ஊனமுற்றவர்களுக்கு பலமனைகள், சுயமாக சம்பாதிக்கும் வசதிகள்.

இலங்கையில் அவன் நெஞ்சுரம் கொண்டவனாக இருந்தும் வயிற்றுப் பிழைப்புக்காக சுவீப் டிக்கற் விற்கிறான், பலர் பிச்சை எடுக்கிறார்கள்.

ஆக ஏழைகளுக்கு உதவுகிறது. இங்கே தெருக்களிலும் வெயிலிலும்அவனதுவாழ்க்கை அமையவேண்டியிருக்கிறது.

இந்நிலையை மாற்றுவது தான் இறைவனை நேரில் காண்பதற்கு சமம்.

முடியுமானால், ஏன் அது இன்னும் நடக்கவில்லை.

எண்ணிப் பார்த்தால் யாழ். மாவட்டத்தில் 500 ஊனமுற்றோர் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு வீடில்லை, உணவில்லை, வைத்திய வசதியில்லை, உறக்கமில்லை. இன்னும் மூன்று சில்லு வண்டியில் அவனது மரத்துடபோன வாழ்வைக் காண்கிறோம்.

உங்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது.

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம், "உதவும் கரங்கள்" திட்டத்தில், ஊனமுற்றவர்களுக்கு இன்று வாழ்வளிக்கும் நிலையத்தைத்திறக்கின்றது முடிந்தால் வழங்குங்கள், முடியாவிட்டால் அவர்களுக்காகச் சேவை செய்யுங்கள்.

ஆரம்பத்தில் 10 பேரை அனுமதிக்கும் நிலையத்தில் நூற்றுக் கணக்காக அனுமதிக்க உதவுங்கள்.

இன்று அவர்கள்; நாளை நாங்கள் என்று திடமாக நம்புங்கள்.

தமிழ்ப்பகுதியில் "நிறுவப்படும் முதலாவது வாழ்வளிக்கும் நிலையம், யாழ். லயன்ஸ் கழகத்தால் உருவாகிறது. உதவும் கரங்களால் !உயிர்பெறும் ஊனமுற்றவர் வாழ்வு மலரட்டும்.

வெறும் வாதம்; உதவும் கரங்களுக்கு சாபக்கேடு.

யாழ். அரிமாக் கழகத்தினரின் கருணை உள்ளம் இப்பொழுது, வலது குறைந்தோர் பக்கம் திரும்பியிருப்பது, வலது குறைந்தோர் அனைவருக்கும் பெரும் வரப்பிரசாதமாக அமையுமென்பதில் ஐயமில்லை. கில்னர் மண்டபத்தில் வலது குறைந்தவர்களுக்கு வதிவிட வசதிகள், சௌகரியங்களை மட்டும் அளிப்பதோடு நில்லாது, தொழில் முறைப் பயிற்சிகளையும் அளிக்கக் கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அவர்கள் ஆற்றிவரும் சமூகசேவைப் பணிகளுக்காக யாழ். அரிமாக் கழகத்தினரைப் பாராட்டும் அதேவேளையில், கில்னர் மண்டபத்தைத் தமது வதிவிடமாகப் பேணவிருக்கும் வலது குறைந்தவர்களுக்கும் அவர்கள் வாஞ்சிக்கும் புனர்வாழ்வு கிடைக்கவேண்டுமென்றும், அவர்கள் வாழ்வு மலரவேண்டுமென்றும் வாழ்த்துகின்றோம்.

யாழ். அரிமாக் கழகத்தினரின் உதாரணத்தை இம்மாவட்டத்தில் இயங்கிவரும் ஏனைய சமூகசேவை ஸ்தாபனங்களும் பின்பற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இராசா விசுவநாதன்
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணதண்டனை அமுலிலிருப்பதால் ஷாவை திருப்பிஅனுப்ப முடியாது!

## மாணவரின் கோரிக்கையை ஏற்கமுடியாது என்கிறது பனுமா

பனுமா, மார்ச் 14

**ஈரானில் மரணதண்டனை அமுலில் இருப்பதால் ஈரானிய முன்னுள் மன்னர் ஷாவை அங்கு அனுப்பிவைக்க முடியாது என்று பனுமா அரசாங்கம் அறிவித்துள்ளது.**

கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து பணயம் வைக்கப்பட்டுள்ள அமெரிக்க அதிகாரிகளை விடுவிப்பது ஷாவை ஈரானுக்குத் திருப்பி அனுப்புவதிலேயே தங்கியுள்ளது என்றும் அவரைத் திருப்பி அனுப்பாதவரை பயணக் கைதிகளின் விடுதலை என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும் அதிகாரிகளை பணயம்வைத்திருக்கும் மாணவர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

இதுபற்றி பனுமா அரசாங்கம் கருத்துத் தெரிவிக்கையிலேயே தனது நாட்டின் அரசியல் சட்ட அமைப்பின்படி மரணதண்டனை அமுலில் இருக்கும் நாடொன்றுக்கு அனுப்பமுடியாது என்று தெரிவித்தது.

இதேவேளையில் கடும் சுகவீனமுற்றிருக்கும் ஷாவின் இதயத்தை அகற்றவேண்டுமா என்பது பற்றி ஆராய நியூயோர்க்கிலிருந்து வைத்திய அதிகாரிகள் செல்லவுள்ளனர்.

ஈரானிய ஷா முன்னர் நியூயோர்க்கில் சிகிச்சை பெற்றுவந்தபோது அவரது ஈரலை அகற்றி புதியதொன்றை மாற்றுவதெனில் அது ஆபத்தானது என்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ரு)

## சமய ஆசிரியர் இல்லை

(மன்னர்)

தலைமன்னர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இந்துசமயபாடம் கற்பிக்க ஆசிரியர் இல்லாததால் இந்து சமய மாணவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

ஊனமுற்றவர் வாழ்வு மலரட்டும்.

✯

முகமதலி அப்துலலி

5 - 7, பெரியகடை, யாழ்ப்பாணம். (போன்: 515)

சிலோன் மோட்டர் ட்ரான்சிட் கொம்பனி
(1955) லிமிடெட்.

கடுகதி பஸ் சேவை - யாழ்ப்பாணம்

ஆரம்பம் - 17-3-1980

ஆசனப் பதிவுகள் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படும்

ஆசனப் பதிவு செய்யுமிடங்கள்:

கொழும்பு (1) கொலட்ஸ் லிமிட்டெட்,
101, டி. எஸ். சேனுநாயக்க மாவத்தை,
பொறளை, கொழும்பு—8.
தொலைபேசி: 96101 (5 லைன்)

(2) யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்,
154, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு—13.
தொலைபேசி: 35620

யாழ்ப்பாணம் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
420, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 370, 438, 537

பயணக் கட்டணம்:

கொழும்பு — யாழ்ப்பாணம் — (ஒரு வழி) — ரூபா 45/- ஒருவருக்கு
கொழும்பு — அனுராதபுரம் — (ஒரு வழி) — ரூபா 30/- ஒருவருக்கு

சி. எம். ரி. உல்லாச கடுகதி

சிலோன் மோட்டர் ட்ரான்சிட் கொம்பனி
(1955) லிமிடெட்.
(கொலட்ஸ் குழு அங்கத்தினர்)
101, டி. எஸ். சேனுநாயக்க மாவத்தை, கொழும்பு—8.

## கல்லூரித் தினம்

(உடுப்பிட்டி)

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரித் தினம் இம்மாதம் 17ம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

அன்றைய தினம் கல்லூரி அதிபர் வண. பிதா. ஜீ. ஏ. பிரான்சிஸ் யோசேப் அடிகளார் கல்லூரி ஆலயத்தில் விசேட திருப்பலிப் பூசையும் ஒப்புக்கொடுப்பார்.

## அணுகுண்டு பரீட்சையை நடத்த இந்தியா தயங்காது'

புதுடில்லி, மார்ச் 14

"தேசிய நலனுக்காக அணுகுண்டுப்பரீட்சையை நடாத்த இந்திய அரசாங்கம் தயங்காது" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறினுர்.

இந்திய மேல்சபையில் பேசுகையிலேயே திருமதி காந்தி மேற்கண்டவாறு கூறினுர்.

அணுசக்தியை ஆக்கப்பணிகளுக்கு பயன்படுத்துவதே அரசின் நோக்கம் என்றும் கூறிய அவர் தொடர்ந்து பேசுகையில், அணுசக்தித்துறையில் நவீன தொழில்நுட்பதுறையைப் பயன்படுத்தி புதிய கண்டுபிடிப்புக்கள் கண்டுபிடிக்கப்படும் என்ருர்.

## அரபுக்கடல் பிரதேசத்துக்கு அமெரிக்க கடற்படை
### 'பிராவ்தா' கண்டனம்

மாஸ்கோ, மார்ச். 13

அரபுக்கடல் பிரதேசத்துக்கு 1,800 கடற்படைத் துருப்புக்களை அனுப்ப ஜனுதிபதி கார்ட்டர் முடிவு செய்திருக்கிருர். இது அரபுக்கடல், பாரசீக வளைகுடாப் பிரதேசத்தில் பதற்றத்தை அதிகரிப்பதற்காக எடுக்கப்பட்ட மற்ருெரு நடவடிக்கையாகும்." என்று சோவியத் யூனியன் உத்தியோக ஏடான 'பிராவ்தா எழுதியுள்ளது.

'பிராவ்தா' மேலும் எழுதுவதாவது: "தியாகோ கார்ஸியா தளத்தை விரிவுபடுத்தும் பணிகளுக்கு அமெரிக்கா மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. அமெரிக்க அயல்துறை, மற்றும் இராணுவத்துறை நிபுணர்கள் பலர் இந்தப் பிராந்தியத்தில் பல ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டனர். எதிர்காலத் தலையீடுகளுக்குத் தேவையான பாய்ச்சல் தளங்களை அவர்கள் தேடினர். இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்க இராணுவ பலம் அதிகரிக்கப்படுவது அரபு நாடுகளுக்கும், இந்து மாகடல் கரையோர நாடுகளுக்கும், கவலை தருவதாகும். ஆயுதப் போட்டியை அதிகரித்தல் என்ற நோக்குடன் செயல்படும் அமெரிக்காவின் அண்மைக்கால நடவடிக்கைகளைக் கவனிக்கும்போது, அரபு நாடுகளும் இந்து மாகடல் நாடுகளும் கவலைப்படுவது நியாயமே." இவ்வாறு 'பிரவ்தா' எழுதுகிறது.

## அமெரிக்க உளவாளி ஆப்கானிஸ்தானில் கைது

மாஸ்கோ மார்ச் 14

அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர் என்று கருதப்படும் எகிப்தியர் ஒருவரை ஆப்கானிஸ்தான் அரசாங்கம்கைது செய்துள்ளது. இஸ்லாமிய புரட்சியாளர்களுக்கும் சோவியத் ஆதரவுப் படைகளுக்குமிடையே நடைபெற்ற மோதலொன்றின்போது கைது செய்யப்பட்ட இவர் தான் அமெரிக்க உளவாளி என்று ஒத்துக்கொண்டுள்ளதாகவும் மாஸ்கோ வானெலி செய்தியொன்றை ஒலிபரப்பியது. (ரு)

## கருணுநிதியை எதிர்த்து நின்று தோற்கடிப்பேன்
### ஜனதா தலைவர் உறுதி

(சென்னை)

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், தி. மு. க தலைவர் திரு. கருணுநிதி எந்தத் தொகுதியில் போட்டியிட்டாலும், அவரை எதிர்த்துப் போட்டியிட்டு அவரைத் தோற்கடிக்கப்போவதாக தமிழ் நாடு ஜனதாக் கட்சி துணைத் தலைவர் நெல்லை ஆர். ஜெயமணி தெரிவித்துள்ளார்.

நெல்லை ஆர். ஜெயமணி, கலைக்கப்பட்ட தமிழக சட்டப் பேரவையில் ஜனதாக் கட்சி உறுப்பினராக இருந்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

ஊருக்கு உதவுக

-மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-சந்திரமோஹன்
கவிதா நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்மன்ட் கலர்)

**வின்ஸர்** 3வது ஜனத்திரள் வாரம்! (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9
நாகேஷ்-முத்துராமன்-சௌகார் ஜானகி
**“எதிர் நீச்சல்”** (புதிய பிரதி)
குறிப்பிட்ட தினங்கள் மட்டும்

**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க “இருவர் உள்ளம்”
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா
பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
**இருவர் உள்ளம்**
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி: 4 காட்சிகள்
முத்துராமன் - ஜெய்சித்ரா - ஸ்ரீகாந்த்
**இன்ஸ்பெக்டர் மனைவி**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
**சஞ்சீர்** (ஹிந்தி) **SANJEER**

**லிடோ** (யாழ்.நகர்) Daily: 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30
போன்: 7698
**ARABIAN ADVENTURE**
(Color)

**சாந்தி** யாழ்நகர் போன்: 7642
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45 காட்சிகள்
கமல் - சுஜாதா - ஸ்ரீகாந்த் - ஜெய்சங்கர்
தேங்காய் சீனிவாசன் - மனோரமா
**உயர்ந்தவர்கள்** (புதிய பிரதி)

GRAND GALA RELEASE
**REGAL** STARTING TODAY
JAFFNA. Phone: 360
Daily at 10-30 a. m. 2-00, 4-30, 7-00 & 9-30 p.m.
Daily 5 Shows
From the Jungles of the Caribbean...
to the streets of New Orleans
The evil of Mr Big... and the
Mystery of Solitaire
007 is where the action is...
ROGER
MOORE
as
JAMES
BOND
Jan Flemi ngs
**LIVE AND LET DIE**




More Suited for Adults
All Passes Suspended


# தவக்கால நற்சிந்தனை



**நண்பா!**

இரவு நேரம் ஒலிவ் மரங்கள் அடர்ந்த இடம், அப்போஸ்தலர்கள் உறங்குகிறார்கள். யேசு செபித்துக்கொண்டிருக்கிறார். சேவகர்களை அழைத்துக்கொண்டு யூதாஸ் தோட்டத்திற்குள் நுழைகிறான். நட்பின் ஓர் குறியால் இயேசுவை எதிரிகளுக்குக் காட்டிக்கொடுக்கிறான்.

இயேசு அவனை உற்று நோக்குகிறார். இத்தகைய பயங்கரத்துக்குரிய துரோகத்திற்காக யூதாஸை அவர் சபிக்கப் போகிறாரா? இல்லை. 'நண்பா' என்று இயேசு அவனை அழைக்கிறார். என்னைக் காட்டிக் கொடுத்து நீசெய்யும் கொடிய துரோகத்தை நீ உணரவில்லையா? யூதாஸ், நீசற்று சிந்தி உன் குற்றத்துக்காகத் துயரப்படு. இன்னும் நேரம் இருக்கிறது என்று யேசு கூறுகிறார்.

அந்நேரத்தில் அவனைக் கைவிட இயேசுவிரும்பவில்லை. அவன் அவரைக் கைவிட்டாலும் காட்டிக்கொடுத்தாலும், இன்னும் அவர் அவனை நேசிக்கிறார். இது மாபெரும் அன்பு என்னையும் இவ்விதமே அவர் நேசிக்கிறார். குற்றம்புரியும் ஒவ்வொருமுறையும் நான் இயேசுவுக்கு எதிராகக் குற்றம் புரிகிறேன். ஆயினும் அவர் என்னை மீண்டும் அன்பு வாழ்விற்கு அழைக்கிறார். நண்பா-மனந்திரும்பிச் செல்.

—வணமேரி பஸ்ரியன் அடிகள்.


**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி-ஜமுனா
**பொம்மைக் கல்யாணம்**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
விஜயகுமார்-ஜெயசித்ரா
**தாயில்லாக் குழந்தை**

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
நாகேஸ்வரராவ், ஜமுனா
**மனிதன் மாறவில்லை**
(புதிய பிரதி)


## யாழ். மேலதிக நீதவான்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேலதிக நீதிமன்ற நீதவானாக திரு. எஸ். நாகராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

## இல்லப்போட்டி

(உடுப்பிட்டி)

கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி இம்மாதம் (கு) 20ம் திகதி நடைபெறவுள்ளது.


## ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு/2414

மேற்படி வழக்கில் வாதியாகிய காங்கேசந்துறை சந்தை குறுக்கு வீதி தம்பையா காத்தலிங்கத்துக்கு விற்பனவு திகதி வரை போகவேண்டித் தீர்ந்த தொகை ரூ 10094/07 சதம் வழக்குச் செலவு ரூபா 562/90 சதம் இத்தொகையில் ரூபா 350/- கழித்து, பின்னர் ஏற்பட்ட விற்பனவு சலார்களும், இத்தொகையை பிரதிவாதியாகிய காங்கேசந்துறை, கனகர் தோட்டம் வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்களிடம் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 9-4-1980 புதன்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பழை கோயிற்பற்று பழை இறை "பறட்டைக்காடு" நி.ப. (1½) ஒன்றரை இதற்குள்ளிருக்கும் வீட்டில் கிழக்குப் பக்கமாக அரைவாசியும், செய்பயிர் வான்பயிர்களும் கிணறும் இதற்கு எல்லை கிழக்கு சுப்பிரமணியம் செல்வசிறிக்கும் டெண்சாதிக்குமுரிய ஆதனம். வடக்கு கந்தையா சின்னராசாவுக்கும் பெண் செல்லக்கண்டுவுக்கும் மறு பேருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு இதன் மிகுதி ஆதனம், தெற்கு வயித்திலிங்கத்திலுதனம் இதடங்கலும். ஆனால் மேற்படி கிணற்றில், மேற்கெல்லைக் காணிக்காரரின் அரைவாசிப் பங்கும் வழிவாய்க்கால் புறநீங்கலாக'

வ. சி. மகாதேவன்
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்
553, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
5222

## கே. ஜி. எக்ஸ்பிரெஸ் பஸ் சேவை

சாயக்கூடிய, வசதியான, ஆடம்பரமான பஸ்கள் தினசரி கீழ்க்கண்ட இடங்களிலிருந்து புறப்படும்:

**கொழும்பு / யாழ்ப்பாணம்**

வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் கோவிலடி
லோரன்ஸ் ரோட் — இரவு 7-30 மணி
கோட்டை புகையிரத நிலையம் — இரவு 8-00 மணி

**யாழ்ப்பாணம் / கொழும்பு**

வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம் இரவு 8-00 மணி
முன்பதிவு செய்யும் இடங்கள்:
இராஜேஸ்வரி ஹோட்டல்,
69, நொறிஸ் ரோட், கோட்டை.
தொலைபேசி: 25939 பிற்பகல் 2-00 மணிமுதல் இரவு 7-00 மணிவரை
பிளாசா தியேட்டர், வெள்ளவத்தை.
தொலைபேசி: 88070 பிற்பகல் 1-30 மணிமுதல் இரவு 10-00 மணிவரை
காமினி தியேட்டர், மருதானை.
தொலைபேசி: 93310 காலை 9-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை
வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 559 காலை 8-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை

**கட்டணம் ரூ. 50/- (ஒரு வழி மட்டும்)**

பயணம் செய்யும் போது பணத்தை உங்களுடன் எடுத்துச் செல்லவேண்டியதில்லை. கீழ் குறிப்பிட்ட இடங்களில் உங்கள் பணத்தை ஒப்படைக்கவோ பெற்றுக் கொள்ளவோ முடியும்.

★ பிளாஸா தியேட்டரில் ரூபா 1000/-க்கு உட்பட்ட தொகை ஒப்படைக்கவோ அல்லது பெற்றுக் கொள்ளவோ முடியும்

கே. ஜி. இன்டஸ்ரீஸ், ஸ்ரீ சங்கராஜமாவத்தை, கொழும்பு.
வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம்.
எத்தொகையும் ஒப்படைக்கவோ பெற்றுக்கொள்ளவோ முடியும்

★ காலை 6 மணிக்கு பஸ்கள் கொழும்பு/யாழ்ப்பாணம் சென்றடையும்.
5133

**SRIDHAR - Jaffna**
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00, 9-30 p.m.




FRED WILLIAMSON
in
**THAT MAN BOLT**
WITH
MIKE STONE — World Professional Light Heavy weight Karate Champion
KEN KAZAMA — Japan Kick-Boxing Champion
EMIL FARKAS — European Black Belt Karate Champion
DAVID CHOW — Former California State Judo Champion
BIG NAME IN KARATE
**“That Man Bolt”**
BIG NAME IN POWER, STRENGTH AND VIGOUR
**“That Man Bolt”**
BIG NAME IN ENTERTAINMENT
**“That Man Bolt”**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஈழநாடு The EELANAADU 50 சதம்



நிக்கோவுக்கு வேறு கிளை இல்லை

## ஏப்.10ல் றொடீஷியாவுக்கு சுதந்திரம்

சாலிஸ்பரி, மார்ச் 14 பிரிட்டனின் கடைசி ஆபிரிக்க குடியேற்ற நாடான றொடீஷியா ஏப்ரல் மாதம் 18ம் திகதி 'சிம்பாப்வே' என்ற பெயரில் சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்யப்படும் என றொடீஷியாவில் உள்ள பிரிட்டிஷ் கவர்னர் அறிவித்துள்ளார்.

# நூல்நிலைய குழு உறுப்பினர் முருகரத்தினம் ராஜினுமா!

## திறமையற்ற நிர்வாகம் காரணமாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை பொது நூல்நிலைய குழு உறுப்பினர் பதவியிலிருந்து, தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரான திரு. க. முருகரத்தினம் நேற்று ராஜினுமா செய்துள்ளார்.

இவர் தமது ராஜினுமா கடிதத்தை நேற்று யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதனுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

ராஜினுமா கடிதத்தின் பிரதிகள், மாநகரசபை ஆணையாளருக்கும், நூல் நிலைய குழுத் தலைவருக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

திரு. க. முருகரத்தினம், நேற்று இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில், மாநகர முதல்வரின் திறமையற்ற நிர்வாகத்தின் காரணத்தினுல் அவரால் நியமிக்கப்பட்ட இக்குழுவில் அங்கம் வகிக்க விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

## கருணுநிதியை...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

நிருபர்கள் மத்தியில் திரு. ஜெயமணி பேசுகையில் கடந்த காலத்தில, இந்திராவை, இதே கருணுநிதி நகர்வாலா ஊழல்ராணி என்று கூறி வந்தாரென்றும், இன்று அது லட்சிய உறவென்றும் கருணுநிதி உறவாடுவதும், இந்திரா காங்கிரசிற்கு கருணுநிதி அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்து விட்டார் என்றும் கூறினர்.

## நிம்மதி...

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

வீதயிலுள்ள கி னர் மண்டபத்தல திறக்கின்ருேம். இந்நிலையம் இலங்கையில் மூன்ருவது நிலையமாகும். நாளடைவில் உங்கள் அனைவருக்கும் நிம்மதியளிக்கும் நிலையமாக இது செயல்படுமென உறுதியளிக்கின்ருேம்.

## 'கடித உறையில் தமிழும் வேண்டும்'

(யாழ்ப்பாணம்)

"அரச சேவைக்காக தபாற் செலவின்றி அனுப்பப்படும் கடித உறையில் 'ரஜ சேவய' எனத் தனிச் சிங்களத்திலேயே எழுதப்பட்டிருக்கிறது. தமிழிலும் அரச சேவை என எழுதவேண்டும் எனப் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்ப வேண்டும்".

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் சங்கானைக் கிளைச் செயலாளர் திரு. இ. சி. வி. திருச்செல்வம், கட்டுடைக் கிளை உறுப்பினர் திரு. ஈ. என். கே. சந்தசாமி ஆகியோர் கேட்டுள்ளனர்.

இவ்விவகாரம் தொடர்பாக கூட்டணியின் சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்கள் எழுதிய கடிதத்திற்கு, எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வருமாறு பதில் அளித்திருந்தனர். இதனையடுத்தே திரு. அமிர்தலிங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். (கொ-கு)

## நாளை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்களின் இராப்போசன விருந்து நாளை ஞாயிற்றுக்கிழமை மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் திரு. க.கைலாசபதியும், அவரது பாரியாரும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள். (கொ)

## இராப் போசன விருந்து இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் 28-வது வருடாந்த இராப்போசன விருந்து இன்று இரவு நடைபெறுகிறது.

மன்றத்தலைவர் செல்வன் செ. இராஜகுலசிங்கத்தின் தலைமையில் நடைபெறும் இவ்விருந்தில் யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் கே. தெய்வேந்திரராஜா பிரதம விருந்தினராகக்கலந்து கொள்கிருர். (இ)

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 2 ம் திகதி

(15-3-1980) சனிக்கிழமை

மேடம்- கருத்து வேற்றுமைகள் கலகத்துக்கு இடமளிக்கும், புதிய இடத்திலிருந்து பகை தலை தூக்கலாம், மௌனமும் தெய்வ பக்தியும் நன்று.

இடபம்- புதுமையில் நாட்டம் பிறக்கும், குறிக்கோளில் வெற்றியுண்டு, ஆனந்த வாழ்வும் உண்டாம்.

மிதுனம்- எண்ணம்போல் வாழ்வு இன்று மலரும், சிலருக்கு புதிய தொழில்களிலும் வாய்ப்பு ஏற்படும், கலகலப்பானதினம்.

கடகம்- நிலையும் தடுமாறும், நினைத்ததும் தடைப்படும், சிலருக்கு திடீர் பயணமும் இடம் பெறலாம்.

சிங்கம்- பொன்ஞன வாழ்வு பெண்ணுலே கிட்டும், கண்ணியம் கடைவிரிக்கும், கடமையும் சிறக்கும்.

கன்னி- செய்தொழில் நஷ்டமுண்டு, மேலதிகாரிகளின் கண்டனங்களுக்கும் இலக்காகுவீர்கள், கொடுக்கல் வாங்கலில் பிணக்கும் ஏற்படலாம்.

துலாம்- இறைவழிபாடு மேலிடும், பிதாவழிச் சுகசெய்திக்கும் இடமுண்டாம், இதயச் சுமையும் அகலும்.

விருச்சிகம்- புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகலாம், மனைச் சிறப்பும் உண்டு, பொருளாதார நிலையும் சீரடையும்.

தனுசு- சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத வரவுக்குமிடமுண்டாம், சுப கருமமும் இடம் பெறலாம், நண்பர்களின் நல்வாழ்த்தும் உண்டு.

மகரம்- ஆயுதபீடைக்குமிட மேற்படலாம், தொழிலிலும் மந்தநிலை காணப்படும், வீண் பழிக்கு மாளாகுவீர்கள், பொறுமையே நன்று.

கும்பம்- துன்பத்தின் ரேகைகள் படரும், வருமானத்திலும் வீழ்ச்சி தென்படலாம், வாழ்விலும் பிரச்னைகள் தலைகாட்டும்.

மீனம்-பேச்சாளர்கள்பெரும் புகழடைவர். நினைத்தவை நடக்கும், மனத்திரையும் அகலும், சொகுசான வாழ்வுமுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

புத்தூர் சோமஸ்கந்தா மாணவர் பகிஷ்கரிப்பு:

## ஆசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை; இரு மாணவர் இடைநிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

புத்தூர் சிறீ சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெற்ற மாணவர்களின் பகிஷ்கரிப்பு தொடர்பாக ஆசிரியர் ஒருவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் இருவர் இடைநிறுத்தப் பட்டுள்ளனர். ஆசிரியர் இருவர் வேறுபாடசாலைகளுக்கு மாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

இப்பாடசாலையின் உயர் வகுப்பு மாணவர் ஒருவர் பாடசாலை அதிபர் முன்னிலையில்வைத்து மேற்படி பாடசாலை ஆசிரியர் ஒருவரால் தாக்கப்பட்டதை அடுத்து அப்பாடசாலை மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்து வந்தனர். அதைத் தொடர்ந்து நடைபெற்ற பேச்சு வார்த்தையை அடுத்து பிரச்னை சமரசமாகத் தீர்க்கப்பட்டு மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றனர்.

பாடசாலைக்குச் சென்ற உயர் வகுப்புமாணவர்களுக்குத்தங்களால் படிப்பிக்க முடியாதெனவும், படிப்பிக்க வேண்டுமென கட்டாயப்படுத்தும் பட்சத்தில் தங்களுக்கு மாற்றம் தரும்படியும் இரண்டு ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இரு ஆசிரியர்களும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

மாணவனைத் தாக்கிய ஆசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்களில இருவர் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். (கொ)

## கூட்டணி செயற்குழு இன்று கூடுகிறது

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்றும் நாளையும் யாழ். தமிழர் விடுதலைக்கூட்டணி தலைமைச் செயலகத்தில் நடைபெறுகிறது.

திரு.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் மாவட்ட அபிவிருத்தி சபைகளின் அதிகாரங்கள் பற்றி ஜனுதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட பிரத்தியேக அறிக்கை குறித்தும் இன்றைய அரசியல் நிலைமற்றும் கூட்டணியினர் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இக்கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படும். (இ)

## சென்பற்றிக்ஸ் 6—190

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையே வட்டுக்கோட்டையில் நேற்று ஆரம்பமான 63வது வருடாந்த மோதலின் முதல்நாள் ஆட்டநேர இறுதியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி 6 விக்கட் நஷ்டத்துக்கு 190 ஓட்டங்களை எடுத்திருந்தனர்.

எம். ஜே. மலைமான் 40 ஓட்டங்களுடன் தொடர்ந்து ஆடிக் கொண்டிருக்கிருர். கே. ஶ்ரீதரன் 80 ஓட்டங்களுககு 5 விக்கட்டுக்களைக் கைப்பற்றினுர்.

ஆட்டம் இன்று காலை தொடரும். (இ)

## யாழ்.ஆஸ்பத்தி...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

னர்.

மண்டைதீவை சேர்ந்த குகவரதராசா என்பவரே சாவலாளியாலும்கங்காணியாலும் பிடிக்கப்பட்டவராவர் இவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கத்தி ஒன்றும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது. மற்றும் 3 சந்தேகநபர்களை பொலிஸார் தேடிவருகின்றனர்.

யாழ். இன்ஸ்பெக்டர் திருச்சிற்றம்பலம் இது பற்றி விசாரணை செய்து வருகிருர்.

இதே வாட்டில் இதே போன்று முன்பு ஒரு நோயாளி இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (கொ)

## விமானம் நொருங்கி 87 பேர்பலி

நியூயோர்க், மார்ச் 14 வார்ஸோவில் போலந்து விமானம் ஒன்று விழுந்து நொருங்கியதில் 77 பிரயாணிகளும் 10 விமானச் சிப்பந்திகளும் பலியானுர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஒஸ்மானியா பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்கள் நேற்று மூன்ருவது தினமாக வகுப்புகளைப்பகிஷ்கரித்தனர்.

மாணவர்கள் கோரிக்கைகளுக்கு இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாததாலேயே மாணவர்கள் தொடர்ந்தும் வகுப்புக்களைப்பகிஷ்கரித்து வருகின்றனர்.

வழமைபோல் நேற்றும் மாணவர்கள் பாடசாலைக்கு வந்த போதும் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. பாடசாலைக்கு வெளியில் நின்றுவிட்டுத் திரும்பிச் சென்றுவிட்டனர். (கொ-கு)

# மரண அறிவித்தல்

## திரு. சுப்பிரமணியம் பரமசாமி

அரியாலை சுப்பிரமணியம் பரமசாமி காலமாகிவிட்டார். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகேஸ்வரி (யாழ். அரசினர் வைத்தியசாலை), கமலாம்பிகை, துரைராசா (துரை), நடராசா (பெருந்தெருக்கள் பூநகரி), தர்மகுலசிங்கம், (புண்ணியம், யாழ். அரசினர் வைத்தியசாலை), அருளம்பலம் (மின்சசார சபை யாழ்ப்பாணம்) சரோஜினிதேவி, செல்வராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இராஜா, சகாதேவன், S. M. ரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனுரும் ஆவார். அன்னரின் பூதவுடல் இன்று (15-3-80) காலை 8-00 மணிக்கு 163/2 சின்னக் கிணற்றடி ஒழுங்கையில் இருக்கும் அன்னரின் இல்லத்திலிருந்து தகனக்கிரிகைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

5229

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மார்ச்மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. QE/8048/75 The Eelanadu Ltd. P. O. 49. Telegram Eelanadu. Phone 368

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org